கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 411/2019**

திரு. பாலசுப்பிரமணியம் (P.W. –1) **12.11.2024.**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1,2,4, 9 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. எத்தனை ஏக்கராவுக்கு தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒரு ஏக்கர் 80 சென்ட்க்கு தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.. தான செட்டில்மெண்ட் படி மொத்த விஸ்தீரணம் 2.62 ஏக்கர் என்றால் தெரியாது. 2.62 ஏக்கர் சொத்துக்காக வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. அதை பொறுத்து பரிகாரங்கள் இந்த தாவாவில் நான் கூறவில்லை என்றால் சரி. 1.80 ஏக்கருக்கு தான் பரிகாரம் கூறியுள்ளேன். 2.62 ஏக்கர் தான செட்டில்மெண்ட் செய்தது செல்லாது என்று எந்த பரிகாரமும் இந்த தாவாவில் நான் கோரவில்லை என்றால் சரி. தாவா சொத்தில் ராமாத்தாளுக்கும் லட்சுமிக்கும் பங்கு உள்ளது என்பதால் தான் அவ்வாறு பரிகாரங்கள் நான் கோரவில்லை என்றால் சரியல்ல. ராமாத்தாலும் லட்சுமியும் வேறு நபர்களை வைத்து தான செட்டில்மெண்ட் பத்திரம் ஆள் மாறாட்டம் செய்து ஏற்படுத்தவில்லை என்றால் சரி. ராமாத்தாள் லட்சுமி பெயரில் உள்ள ஆன்லைன் பட்டாவை தான் தாவாவில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அந்த பட்டா தாசில்தாரால் வழங்கப்பட்ட பட்டா என்றால் தவறு. லட்சுமிக்கும் ராமாத்தாளுக்கும் தாவா சொத்தில் உரிமை உள்ளதால் தான் வருவாய் துறையில் பட்டா அவர்கள் பெயரிலும் கொடுத்துள்ளார்கள் என்றால் தவறு. அவர்களுக்கு

பாகம் இல்லை. தாவா சொத்து விவரத்தில் சொத்துக்கள் எந்த உட்பிரிவின் கீழ் வருகிறது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. உட்பிரிவு மற்றும் விஸ்தீரணம் கொடுத்துள்ளேன். தாவா வழக்குறையை காண்பித்து கேட்டபோது அவ்வாறு குறிப்புகள் இல்லை.

2. தாவா சொத்து விவரமே தவறு. தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்து விவரத்தை இந்த தாவா சொத்து விவரத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தவறு சொல்லி உள்ளேன். 1ம் பிரதிவாதி மூன்றாம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் பத்திரமும் இரண்டாம் பிரதிவாதி நான்காம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் பத்திரமும் சட்டப்படி செல்லும் என்றால் தவறு. தாவாவில் தாக்கல் செய்துள்ள கந்தாய ரசீதுகள் தாவா தாக்கல் செய்வதற்கு ஐந்து, ஆறு வருடங்களுக்கு முன்பு ஏற்பட்டவை என்றால் தவறு. 1986 லிருந்து தாக்கல் செய்துள்ளேன். அந்த கந்தாய ரசீதுகள் வழக்கிற்காக தயார் செய்துள்ளேன் என்றால் தவறு. ராமாத்தாள் மற்றும் லட்சுமி ஆகியோரிடம் சொத்துக்களை சேர்த்து கிரையம் பெறாமல் நாங்கள் பழனிச்சாமி, சுப்பையகவுண்டரிடம் இருந்து என் தகப்பனார் கிரையம் பெற்றது செல்லாது என்றால் சரியல்ல. நாங்கள் கிரையம் பெற்ற ஆவணம் 1,2 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

3. 1,2 பிரதிவாதிகளை அவர்களுக்கு உரிய பாக சொத்தை தான் தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். ஆகையால் நாங்கள் தாக்கல் செய்துள்ள தாவா செல்லாது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்

என்றால் தவறு. 1,2 பிரதிவாதிகளை நாங்கள் கிரையம் பெற்ற சொத்து மற்றும் அவர்களுடைய குடும்ப சொத்தை பொருத்து இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 305/2011 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதால் அதில் தீர்வு ஏற்படும் வரை என்னுடைய தாவாவில் தீர்வு ஏற்படாது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து விவரம் தவறு, தாவா மதிப்பீடு செய்தது தவறு . ஆகையால் தாவா தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

1,2 பிரதிவாதிகள் மற்றும் அவர் குடும்பத்தாருக்கு எதிராக இந்த சொத்தைப் பொறுத்து லாபம் அடைய வேண்டி பொய்யான புகார் கொடுத்து குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. குற்ற புகாரில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உரிமையியல் பிரச்சனை என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2024.11.12 18:36:24 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.